**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.</u>**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

திருவள்ளுவராண்டு 2055 பராபவ வருடம், ஆனி மாதம் 01–ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 – ஆம் நாள் திங்கள்கிழமை

<u>ஆண்டுபட்டிகை வழக்கு எண். 20/2026</u>

**<u>CNR.NO.TNKR11-000084 - 2026</u>**

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையம்.
(காவல்நிலைய குற்ற எண்.51/2025)
சட்டப்பிரிவு: 4(1) (C) TNP (Amendment) Act ...குற்ற முறையிடுபவர்.

**/ எதிர்/**

சசிக்குமார், (வயது 46)
த/பெ. முத்தையன்,
குடித்தெரு, கம்மாநல்லூர்,
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம். ...எதிரி.

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | District Munsif Cum Judicial Magistrate, Krishnarayapuram |
| 2. | Name of the Judge | Thiru.R.Bagyaraj, B.A., B.L., |
| 3. | Date of Judgment | 15.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC 20/2026, CNR.NO.TNKR11-000084-2026 |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police PEW P.S. /Vs/ Sasikumar |
| 6. | Date of Occurrence | 29.03.2025 |

| | | |
|---|---|---|
| 7. | Date of Complaint | 29.03.2025 |
| 8. | Date of Arrest if any and Remand | 29.03.2025 |
| 9. | Period of remand of the accused | Nil |
| 10. | Date of Release on bail | 29.03.2025 |
| 11. | Date of Final report | 14.05.2025 |
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil |
| 13. | Date of questioning of the accused U/s.240 of Code of Criminal Procedure and U/s 263 BNSS | 10.04.2026 |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | No. of. Witness Chief Cross<br>PW-1 29.05.2026 29.05.2026<br>PW-2 29.05.2026 29.05.2026<br>PW-3 29.05.2026 29.05.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil |

| | | |
|---|---|---|
| 16 | Date of examination of the accused U/s. 313 of the Code | 05.06.2026 |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil |
| 19. | Date of Commencement of Trial | 29.05.2026 |
| 20. | Date of closure of Trial | 29.05.2026 |
| 21. | Date of Sentence or order | 15.06.2026 |
| 22. | Date of service of copy of judgment to the accused | Nil |
| 23. | If any delay, give explanation | No |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 02.03.2026 –ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 05.06.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசுக்காக கற்றறிந்த உதவி குற்ற வழக்கறிஞர் நிலை 1 திருமதி.S.பெரியமறத்தி B.A.,L.L.M., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.S.செல்வகாந்தி B.A.,B.L., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு கா. நி. கு. எண். 51/2025 |
| எதிரியின் பெயர் | சசிக்குமார், (வயது 46)<br>த/பெ. முத்தையன்,<br>குடித்தெரு, கம்மாநல்லூர்,<br>கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 4(1) (C) TNP (Amendment) Act |
| நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 4(1) (C) TNP (Amendment) Act |
| எதிரியின் பதில் | குற்றவாளி அல்ல |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி அல்ல |
| அரசு குற்ற வழக்கறிஞர் | திருமதி.S.பெரியமறத்தி B.A.,L.L.M., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.S.செல்வகாந்தி B.A.,B.L., |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 05.06.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 15.06.2026 |

## தீர்ப்புரை

இவ்வழக்கானது மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையம், காவல் சார்பு ஆய்வாளர் அவர்களால் BNSS பிரிவு 193–இன் கீழ் 29.03.2025 ஆம் தேதியிட்ட இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவு 4(1)(C) ன் கீழான குற்றச்சாட்டுக்காக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்காகும்.

### 1.இறுதியறிக்கையின் சுருக்கம்

29.03.2025 ம் தேதி 08.00 மணியளவில் PS கம்மநல்லூர் HP பெட்ரோல் பங்க் பின்புறம் எதிரி சசிக்குமார் என்பவர் தனது சுயலாபம் கருதி அரசு அனுமதியின்றியும், இந்தியாவில் தயார் செய்யப்பட்ட சுமார் 180 ML அளவு கொண்ட Express Brandy – 28 பாட்டில்களை அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்தை செய்துள்ளார். எனவே, எதிரியானவர் 4(1) (C) TNP (Amendment) Act – 2024 ன் படி குற்றம் செய்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**2)** மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலைய உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை எதிரியின் மீது கு.வி.மு.ச. பிரிவு 190(1) ன் படி கருத்திற்கொண்டு சட்டப்பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act – ன் படி குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்கு மிகாமலும் அதிகபட்சம் 3 ஆண்டுகள் சிறைதண்டனையும் மற்றும் குறைந்தபட்சம் ரூ.50,000/–மும் அதிகபட்சம் ரூ.1,00,000/– வரை அபராதம் விதிக்க முடியும் என்பதால் இந்த வழக்கு ஆண்டுபட்டிகை வழக்காக (calander Case) ஆக கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்திரவிடப்பட்டது.

**3)** எதிரி முன்னிலையானவுடன் அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 207– மற்றும் 230 BNSS ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி, எதிரியிடம் குற்றம் பற்றி வினவப்பட்டது. பின்னிட்டு எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act – ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எடுத்துரைத்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க இந்த வழக்கில் வகை செய்யப்பட்டது.

**4)** இந்த வழக்கில் அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 1 முதல் 3 வரை குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரியின் தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5) அரசு தரப்பு சாட்சியங்கள் மூலம் வெளிப்படும் வழக்கு சங்கதிகள்:–**

அ.சா.3 திரு.சுரேஷ்குமார் காவல் உதவி ஆய்வாளர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையம், கடந்த 29.03.2024 ம் தேதி 08.00 மணியளவில் மதுவிலக்கு சோதனை செய்ய த.கா. நரேஷ்குமார், சத்தியமூர்த்தி காவல் ஆய்வாளர் திருமதி.பாலகிருத்திகா ஆகியோர்கள் மதுவிலக்கு சோதனைக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி 08.00 மணிக்கு PS கம்மநல்லூர் HP பெட்ரோல் பங்க் ஒரு நபர் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த நபர் ஓட முயற்சி செய்தவரை பிடித்து சோதனை செய்த போது 28 – Express Brandy பாட்டில்கள் வைத்துள்ளார். அவரை விசாரிக்க அவர் பெயர் சசிக்குமார் என்றும்,

விற்பனைக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அதே இடத்தில் சாட்சிகள் நரேஷ்குமார், சத்தியமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி மதுவை சம்பவயிடத்தை குறிப்பிட்டு அழித்தல் மகசர் தயார் செய்து எதிரியிடம் காவல் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை தக்க ஜாமீனில் விடுவித்தார். சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், சங்கதிகளிலிருந்து எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் பகுதிகளைத் தொகுத்து குவிமுச பிரிவு 313(1)(பி)– மற்றும் 351 (1)(பி) ன் கீழ் எதிரியிடம் எடுத்துரைத்து வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சியத்தை பொய் என்றும், தன் மீதான வழக்கு பொய் என்றும், எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

7) <u>அரசு தரப்பு வாதம் :–</u>

அரசு தரப்பில் ஆஜரான அரசு உதவி வழக்கறிஞர் எதிரிக்கெதிராக அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்பட்டும், எதிரியின் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரி மீது ச.பி. 4(1) (C) TNP (Amendment) Act – ன் படி தண்டிக்கத் தகுந்தவர் என்று வாதிடப்பட்டது.

8) <u>எதிரி தரப்பு வாதம் :–</u>

எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தரப்பில், இவ்வழக்கில் விபத்தை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும், கைப்பற்றியதாக சொல்லப்படும் மது பாட்டில்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், அழித்ததாக சொல்லப்படுவதற்கு போட்டோ எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அழித்தல் மகசரிலும் குறிப்பிட்டுள்ள இடத்திற்கும் சாட்சிகள் வாக்குமூலத்தில் அளித்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றும் எதிரி மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது.

9) இருதரப்பு கற்றறிருந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம், **அரசு தரப்பில் எதிரி மீது**

**வனையப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா**? என்பதே ஆகும்.

**10) தீர்வு**

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

29.03.2025 ம் தேதி 08.00 மணியளவில் PS கம்மநல்லூர் HP பெட்ரோல் பங்க் பின்புறம் எதிரி சசிக்குமார் என்பவர் தனது சுயலாபம் கருதி அரசு அனுமதியின்றியும், இந்தியாவில் தயார் செய்யப்பட்ட சுமார் 180 ML அளவு கொண்ட Express Brandy – 28 பாட்டில்களை அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்தை செய்துள்ளார். எனவே, எதிரியானவர் 4(1) (C) TNP (Amendment) Act – 2024 ன் படி குற்றம் செய்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**11)** அ.சா.1 நரேஷ்குமார் த.கா., அ.சா.2 சத்தியமூர்த்தி த.கா., அ.சா.3 திரு.சுரேஷ்குமார் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில், 29.03.2024 ம் தேதி அ.சா.3 க்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 08.00 மணிக்கு PS கம்மநல்லூர் HP பெட்ரோல் பங்க் அருகில் எதிரி சசிக்குமார் என்பவர் போலீசாரை பார்த்து தப்பி ஓட முயற்சி செய்தவரை பிடித்த சோதனை செய்ய 28 – Express Brandy பாட்டில்கள் வைத்திருந்தவரை விசாரிக்க விற்பனைக்காக வைத்திருந்ததாக சொன்னதால் அவரை கைது செய்து மது பாட்டில்களை அ.சா.1, அ.சா.2 ஆகியோர் முன்னிலையில், கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி மதுவை கொட்டி அழைத்து அழித்தல் மகசர் தயார் செய்து எதிரியுடன் காவல் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை தக்க பிணையில் விடுவித்ததாக அ.சா.1 முதல் அ.சா.3 நபர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், அ.சா.3 சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசர் அ.சா.3 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, ஆவணத்தில் அ.சா.1 னின் 1 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.2 ன், 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில், 29.03.2024 ம் தேதி 08.15 மணிக்கு எதிரி சசிக்குமார் என்பவரிடமிருந்து சம்பவயிடத்தில் 180 ML அளவு கொண்ட Express Brandy பாட்டில்கள் – 28

எண்ணிக்கை கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கைப்பற்றுதல் மகசர் கணிணியில் டைப் செய்து பிரிண்ட் எடுக்கப்பட்டது. கைப்பற்றுதல் மகசரின் குற்ற எண். சட்டப்பிரிவு மற்றும் சட்டம் குறிப்பிடப்பட்டது.

**13)** அ.சா.ஆ.6 அழித்தல் மகசர் அ.சா.3 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அழித்தல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.1 மூலம் அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழித்தல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.2 மூலம் அ.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின், குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிட்டு சாட்சிகள் அன்பழகன், சத்தியமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தில் காவல் நிலையம் அருகில் 02.07.2025 ம் தேதி 10.30 மணிக்கு கொட்டி அழிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கைப்பற்றும் நேரத்திற்கு முன்பு கொட்டி அழிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும், முதல் தகவல் அறிக்கை 02.07.2025 ம் தேதி 11.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டதாக உள்ளது அவ்வாறு இருக்கும்போது அழித்தல் மகசரில் குற்ற எண் மற்றும் சட்டபிரிவு குறிப்பிட முடியாது. அதனால், அரசு தரப்பு வழக்கு சந்தேகத்தை உட்படுத்துகிறது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பீர் மதுபானத்தை தடை அறிவியல் பரிசோதனைக்கு அனுப்பி Atrobin/Ethin Algahal/Arrack/ உடல் உறுப்புகளை பாதிக்கக் கூடிய விசத்தன்மை உடையதா என்று அரசு தரப்பில் அறிக்கை பெறவில்லை அதனால், எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும், எதிரி விடுதலை பெற தக்கவர் என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**14)** அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை கடந்த 02.07.2025 ம் தேதி குற்ற எண்.51/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP ACT ன் படி வழக்கு சங்கதிகளை குறிப்பிட்டு 02.07.2025 ம் தேதி 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் எழுதப்பட்டுள்ளது.

**15)** கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை உற்று நோக்கும் பொழுது சம்பவ நேரம் 10.00 மணி என்று குறிப்பிட்டு கைப்பற்றுதல் மகசரில் 10.15 மணிக்கு கைப்பற்றியதாகவும், குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை பின்னிட்டு 11.00 மணிக்கு தயார் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்வதற்கு முன்பே அழித்தல் மகசர் தயார் செய்யப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கு முன்பே தயார் செய்த அழித்தல் மகசரின் குற்ற எண் சட்டப்பிரிவுகள் குறிப்பிட முடியாது. முதல் தகவல் அறிக்கைக்கு முன்பே தயார் செய்த அழித்தல் மகசரின் குற்ற எண் சட்டப்பிரிவு குறிப்பிட்டுள்ளது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பீர் மதுபானத்தை தடை அறிவியல் பரிசோதனைக்கு அனுப்பி Atrobin/Ethin Algahal/Arrack/ உடல் உறுப்புகளை பாதிக்கக் கூடிய விசத்தன்மை உடையதா என்று அரசு தரப்பில் அறிக்கை பெறவில்லை அதனால், எதிரி மீது வனையப்பட்ட குற்றசாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும், எதிரி விடுதலை பெற தக்கவர் என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**16)** இந்த வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றி அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மது மற்றும் மதுபாட்டில்கள் சம்பவயிடத்தில் அழித்ததாக அ.சா.ஆ.6 அழித்தல் மகசர் தயார் செய்யப்பட்டுள்ளது.

**17)** இறுதியில், எதிரிக்கெதிரான சட்ட பிரிவு 4(1)(C) TNP ACT ன் படி வனையப்பட்ட குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை மேற்படி குற்றச்சாட்டிலிருந்து குற்றவாளி அல்ல என தீர்மானித்து குவிமுச பிரிவு 248(1) மற்றும் 271 (1) BNSS –ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரியிடமிருந்து காவல் நிலையத்தில் பெற்ற பிணைப்பத்திரம் மேல் முறையீட்டுக்காலத்திற்கு பின்னிட்டு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. வழக்கு சொத்து தாக்கல் இல்லை. அதனால் வழக்கு சொத்து பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 15 –ம் நாள் இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.06.18 23:39:11 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>பின் இணைப்பு</u>**

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்</u>**

| **சாட்சிகளின் எண்ணிக்கை** | **சாட்சிகளின் பெயர்** | **விளக்கம்** |
|---|---|---|
| அ.சா.1 | நரேஷ்குமார் | முதல் நிலை காவலர் |
| அ.சா.2 | சத்தியமூர்த்தி | முதல் நிலை காவலர் |
| அ.சா.3 | திரு.சுரேஷ்குமார் | புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>**

| **சான்றாவணங்களின் எண்ணிக்கை** | **தேதி** | **சான்றாவணம்** | **நிரூபித்தவர் /சான்றளித்தவர்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 19.06.2025 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவாது சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 19.06.2025 | அழித்தல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | 19.06.2025 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | 19.06.2025 | அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | 19.06.2025 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | 19.06.2025 | அழித்தல் மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | 19.06.2025 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |

**<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி:–இல்லை</u>**

**<u>எதிரி தரப்பில் சான்று பொருட்கள் :– இல்லை</u>**

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:– இல்லை</u>**

RAMAIYAH BAGYARAJ Digitally signed by RAMAIYAH BAGYARAJ Date: 2026.06.18 23:39:17 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>பின்சேர்க்கை:</u>**

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
3. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல்:</u>**

மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.